<u>2018–ம் ஏப்ரல் மாதம் 11ம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற உள்ள திண்டிவனம் நகரமன்றத்தின் சாதாரணக் கூட்ட மன்றபொருள்.</u>

முன்னிலை :-திரு. போ.வி. சுரேந்திர ஷா,
தனி அதிகாரி,
திண்டிவனம் நகராட்சி

1)அரசாணை (நிலை)எண்.78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD(3)துறை, நாள்.04.05.2017 மற்றும் அரசாணை(நிலை) எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD(3)துறை நாள்.13.10.2017–ன்படி திண்டிவனம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிடங்கல் கிராமம்,சர்வே எண்கள்.195/13,196/3 5, 6 பகுதி 7,9,10 பகுதி 11 மற்றும் 196/13 பகுதி ஆகியவற்றில் 2.11 ஏக்கர் அல்லது 91911.60 சதுரடி பரப்பளவில் அமைந்துள்ள ஸ்ரீராம் நகர் என்ற அனுமதியற்ற மனைப்பிரிவின் உரிமையாளர் மனைகளை வரன்முறைபடுத்த ஆன்லைனில் விண்ணப்பித்ததை தொடர்ந்து விழுப்புரம் மண்டலம் நகர்ஊரமைப்பு உதவி இயக்குனர் அவர்களின் கடித நடவடிக்கைகள் ந.க.எண்.1363/2017/விம, நாள்.25.01.2018ல் கிடங்கல் கிராமம், சர்வே எண்கள்.195/13, 196/3, 5,6 பகுதி 7,9,10 பகுதி 11 மற்றும் 196/13 பகுதி ஆகியவற்றில் 2.11 ஏக்கர் அல்லது 91911.60 சதுரடி பரப்பளவில் அமைந்துள்ள ஸ்ரீராம் நகர் என்ற மனைப்பிரிவிற்கு கொ.ஒ.ம.வ/ந.ஊ.உ.இ(வி.ம) எண்.11/2018 என எண்ணிடப்பட்டு (தன்னிச்சையாக) மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

<u>மனைப்பிரிவு ஒதுக்கீடு விபரம்</u>

மனைப்பிரிவு மொத்த பரப்பளவு – 2.11 ஏக்கர்(அல்லது) 91911.60 ச.அடி
மொத்த மனைகள் – 54
விற்பனை செய்யப்பட்ட மனைகள் – 13
விற்பனை செய்யப்படாத மனைகள்–41

பொது ஒதுக்கீடு
பூங்கா 5395.10ச.அடி(விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்பளவில் 10.24%) மேற்படி கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடுகள் இந்நகராட்சிக்கு தன்னிச்சையாக உரிமையுடையதாகிறது.

மேற்படி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மனைபிரிவுகளுக்கு வரன்முறைப்படுத்துதல் கட்டணங்கள் அதாவது மனை எண்.கள் 1 முதல் 10, 13, 14, 15, 1, 18, 19, 24, 25, 26, 28, 29, 30,34 முதல் 37, 41, 42, 44, 45, 46,48 முதல் 53 ஆகிய மனைகளின் பரப்பளவு 47292.90ச.அடி(அ) 4396 ச.மீட்டர் பரப்பளவிற்கு 1 சதுர மீட்டருக்கு ரூ.60.00 வீதம் ஆக 4396 ச.மீட்டருக்கு ரூ.263760/– மனைப்பிரிவு உரிமையாளரால் அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் வளர்ச்சி கட்டணம் 1 ச.மீட்டருக்கு ரூ.250/– வீதம் ஆக 4396 ச.மீட்டருக்கு ரூ.1099000/–ஐ நகராட்சி கருவூலத்தில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. ஆகையால் மேற்படி கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவிற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்த பரிந்துரைத்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1.மேற்படி மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடுகள் இந்நகராட்சிக்கு தன்னிச்சையாக உரிமை கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தினை நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.355/2018/எப்1)

108) [illegible]

11/4/2018

Scanned with CamScanner

2)இந்நகராட்சிக்கு சொந்தமான TN16A–5556 ஈப்பு வாகனம் 09.04.2018 அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர்,வேலூர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்திற்கு செல்லும்போது பழுது ஏற்பட்டது அதனை சரிசெய்ய மகேந்திரா நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான M/s Jain Cars, வேலூர் மூலம் பழுது நீக்கம் செய்ய தோராய செலவினம் ரூ.5694.00/–ஆகும். எனவே மேற்படி பணியினை மேற்கொள்ளவும், மேற்படி பணிக்குரிய செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணியின் அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி மன்ற முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(109)

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

11/4/2018